# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.36/2024

dated : 08.10.2025

P.W.1

Name சுந்தரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சண்முகசுந்தரத்திற்கு முன்னதாக எந்த ஊரில் குடும்ப அட்டை வழங்கப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ-4 ஆவணத்தில் சண்முகசுந்தரத்தின் குடும்ப அட்டை எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இன்று நான் கொண்டு வந்துள்ள குடும்ப அட்டை 29/G/0300207 என்றால் சரிதான். வா.சா.ஆ-4 ல் குறிப்பிட்டுள்ள குடும்ப அட்டை எண் வேறு என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள். அதை என் வழக்கறிஞர் மூலம் படித்துத் தெரிந்து கொண்டேன். அந்த வழக்கறிஞர் இறந்துபோனார் எப்போது இறந்துபோனார் என்று எனக்கு தெரியாது. நான் வேறு ஒரு வழக்கறிஞர் மூலம் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். முந்தைய வழக்கறிஞர் இறந்த பின்னர் அவரது அலுவலகத்திற்கு சென்று என் வழக்கு ஆவணங்களை பற்றி விசாரித்தேன். அவரது இளம் வழக்கறிஞர்கள் வழக்கு ஆவணங்களை கொடுத்தார்கள். நான் 2 ம் பிரதிவாதி அவரது

மனைவியான மூன்றாம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது தெரிந்த பின்னர்தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த தகவலை 1ம் பிரதிவாதியான ஈஸ்வரன் எனக்கு தெரியப்படுத்தினார். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் விடுதலை பத்திரம் கொடுத்த வகையில் பணம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் முன்பே மேற்கண்ட விடுதலை ஆவணங்கள் பற்றிய விவரங்கள் தெரியும். 1, 2 பிரதிவாதிகள் இந்த வழக்கு தாக்கல் செய்ய வருவதற்கு முன்பு என்னை நேரில் சந்தித்தது இல்லை என்றால் அவர்கள் என்னை சந்தித்ததில்லை நான் நேரில் சென்று சந்தித்தேன். வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் அவர்கள் என்னை சந்தித்ததாக கூறியிருந்தால் அது தவறாகும். நான் வழக்குரையில் இரண்டாவதாக கோரியுள்ள பரிகாரம் என்னவென்று எனக்கு தெரியாது ஏனென்றால் எனக்கு வாசிக்கத் தெரியாது. நான்தான் வழக்கு போட்டுள்ளேன். அந்த பரிகாரத்திற்கான விவரங்களை நான்தான் சொன்னேன். நான் வழக்குரையில் 2 வது பரிகாரமாக வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் மத்திய கால வருமானம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 1997 ம் ஆண்டு முதல் 2004 ம் ஆண்டு வரை அந்த வழக்குச் சொத்தை யார் அனுபவித்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள்தான் அனுபவிக்கிறார்கள். 2007 முதல் 2010 ம் ஆண்டு வரை யார் அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. சண்முகசுந்தரம் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. இறப்பு

சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். இறப்பு சான்றிதழில் 08.01.2010 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2010 ம் ஆண்டு வரை மேற்படி சொத்துக்களில் சண்முகசுந்தரத்திற்கு மட்டும்தான் உரிமையுள்ளது என்றால் சரிதான். சண்முகசுந்தரம் உயிருடன் இருக்கும்வரை எனக்கு சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை. நான் மத்திய கால வருமானம் கோரவில்லை. அவ்வாறு வழக்குரையில் இருந்தால் அது தவறாகும். சண்முகசுந்தரத்தின் வாக்காளர் அடையாள அட்டையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அடைமான வைத்த சொத்து என் பெயரில் உள்ள சொத்தாகும். 1998 ஆவணத்தில் நான் மட்டும் எனது சொத்தை அடைமானம் வைத்துள்ளேன். 2005, 2007, 2009 தேதிகளில் என்னுடன் சண்முகசுந்தரமும் அடைமான ஆவணத்தில் அடைமான ஆவணதாரராக உள்ளார் என்றால் சரிதான். என் சொத்தின் மீது உரிமையில்லாத சண்முகசுந்தரம் மேற்படி ஆவணத்தில் தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். வழக்குரையில் சண்முகசுந்தரத்திற்கும் எனக்கும் நடந்த திருமணத்தை சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க இயலும் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் குழந்தை சண்முகசுந்தரம் மூலம் பிறந்த குழந்தையை அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனவே என் குழந்தைக்கு மரபணு சோதனை செய்யவும் 2 ம் பிரதிவாதியின் இரத்த மாதிரிகளுடன் எனது குழந்தையின் மரபணு சோதனைக்குட்படுத்த நான் தயாராக உள்ளேன். அதற்கு நான் மனு தாக்கல் செய்யவில்லை பிரதிவாதி தாக்கல் செய்தால் மாதிரிகள் வழங்க தயாராக உள்ளேன்.

2012ம் ஆண்டு 2ம் பிரதிவாதி அவரது மனைவி பெயருக்கு நன்கொடை எழுதி வைத்த விவரம் இந்த வழக்கு தாக்கல் செய்யும் சில நாட்களுக்கு முன்பு பதிவாளர் அலுவலகத்திலிருந்து தெரிந்து கொண்டேன். நான் அவ்வாறு தெரிந்து கொண்டதாக கூறுவது குறித்த தேதிகுரிய ஆவணங்கள் என் வசம் உள்ளது அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என் வழக்குரையில் என் முந்தைய வழக்கறிஞர் இறந்துபோன பின்னர் அவரது மனைவியிடம் விசாரித்ததாக வழக்குரையில் கூறியிருந்தால் அது தவறாகும். நான் முந்தைய வழக்கறிஞரின் மனைவியை ஒருபோதும் சந்தித்ததில்லை.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.08 17:43:37 +0530